பக்கங்கள் 18

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 22 வெள்ளிக்கிழமை 05.07.2024 அதிர்வு 339

**பங்காளிகளைத் தக்கவைக்க**

## பஸில் கடும் பிரயத்தனம்



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபர் பஸில் ராஜபக்ஷவுக்கும்

05


# தமிழரசின் பெருந்தலைவர் சம்பந்தனின் இறுதி நிகழ்வில் அண்ணாமலை பங்கேற்பு

### யாழ்ப்பாணத்தில் நேற்று புகழுடலுக்குப் பலரும் அஞ்சலி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் இறுதி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ள நிலையில், அந்த நிகழ்வில் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை கலந்து கொள்ளவுள்ளார்.

07




# சம்பந்தன் எம்.பியின் புகழுடலுக்கு யாழ். முஸ்லிம் மக்களும் அஞ்சலி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. யாழ்ப்பாணம்

05




குடா நாட்டின் அச்சு ஊடகத்துறைக்கு நேற்று மிக இழுக்கான - களங்கம் மிக்க - நாள்.

அச்சு ஊடகங்களை நடத்துவது சமூக விரோத நடவடிக்கை போக்கு என்று எண்ணும் அளவுக்கு மிகக் கீழ்த்தரமாக நடந்து கொண்டிருக்கின்றது தன் மதிப்பிழந்து சீரழிந்து வரும் ஓர் அச்சு ஊடகம்.

தெரிந்து கொண்டே நட்டாமுட்டித்தனம் பண்ணுவது அந்த ஊடகத்தின் கீழ்த்தரமான - வழமையான - செயல்போக்கு என்பது அண்மைக் காலத்தில் மக்களின் கருத்தாக வளர்ந்து வருகையில், அதன் நேற்றைய முன் பக்கத் தலைப்புச் செய்தி அதனை அப்படியே உறுதி செய்திருக்கின்றது.

04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# ஹிருணிக்காவின் பிணை கோரிக்கை மனு தொடர்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யவுள்ளார் சட்டமா அதிபர்

மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை பிணையில் விடுவிக்க கோரிய மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்யப்படவுள்ளன என சட்டமா அதிபர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.



இந்தப் பிணை கோரிக்கை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிணை கோரிக்கை தொடர்பில் ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளதால் அதனை எழுத்துமூலம் தாக்கல் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதன்பிரகாரம் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு காலஅவகாசம் வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி, பிணை கோரிக்கை மீண்டும் ஜுலை 11 ஆம் திகதி பரிசீலிக்கப்படும் என உத்தரவிட்டார்.

# பி.எச்.ஐ. கொலைச் சம்பவம் பிரதான சந்தேகநபர் கைது!

எல்பிட்டி – பத்திராஜ மாவத்தை பகுதியில் பொது சுகாதாரப் பரிசோதகர் ரொஷான் குமார சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸைப் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தேகநபரிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. இலங்கைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.



# புதிய கோணத்தில் யுக்திய நடவடிக்கை

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக குழு செயற்பாடுகளை ஒழிப்பதற்கான யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய கோணத்தில் இந்த சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு இராணுவத்தினரின் ஆதரவும் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பின் பல பகுதிகளில் யுக்திய திட்டம் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், எதிர்வரும் நாள்களில் நாடு முழுவதிலும் இந்த சுற்றிவளைப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# தலவாக்கலையில் உள்ள தோட்டத்தில் தீப் பரவல்

தலவாக்கலை – மிளகுசேனை தோட்டத்தில் நேற்று இரவு தீப் பரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மின் கசிவின் காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. தோட்டத்தின் முதலாம் இலக்க நெடுங்குடியிருப்பின் 5 வீடுகளின் கூரைகள் முற்றாகத் தீயினால் சேத மடைந்துள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

மக்களின் உடைமைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர், உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# கடன் மறுசீரமைப்பு வெற்றியால் வலுசக்தித் துறை பலமடையும்!

மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவிப்பு

“கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றியினால் கடந்த நெருக்கடியின் போது முடங்கிக் கிடந்த வலுசக்தித் துறை தொடர்பான திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும். மின்சார நெருக்கடியைத் தீர்க்க இது பெரும் உதவியாக அமையும்.”

– இவ்வாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்தகால நெருக்கடி நிலையின் போது வலுசக்தித் துறை தொடர்பான பல திட்டங்கள் முடங்கின. ஆனால் தற்போது இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளமையுடன், கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. எனவே, வெளிநாடுகளில் இருந்து கடன் பெற்று ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்ட இந்தத் திட்டங்களை, மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான சட்ட ரீதியிலான நிலைமைகள் நிறைவடைந்துள்ளன.

அதன்படி, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றி, நாட்டில் நிலவும் வலுசக்தி நெருக்கடியைத் தீர்க்கப் பெரும் உதவியாக இருக்கும் என்பதைக் கூற வேண்டும்.

மேலும், மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சக்தி அமைச்சு ஆகியவை கூரையின் மீது பொருத்தப்படும் சூரிய சக்தி கட்டமைப்பு மூலம் மின்சார உற்பத்திக்கான செலவு குறித்து பொருத்தமான கணக்கீடுகளை செய்துள்ளன. அதன்படி, கட்டணங்களை குறைக்க முடிந்துள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, குறைந்த விலையில் மின்சாரம் கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு விண்ணப்பிக்க முடிந்தது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மின்சார சபை நட்டமின்றி செயற்படும் நிலையை ஏற்படுத்த முடிந்துள்ளது.

மேலும், அதானி திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் சுற்றாடல் அறிக்கைகள் போன்று அது தொடர்பான மேலதிக பணிகள் இன்னும் இடம்பெற்று வருகின்றன. அவ்விடயங்கள் நிறைவடைந்த பின்னர், தற்போதுள்ள விலைகளின் பிரகாரம் செயற்பட முடியுமா என்பது குறித்து கலந்துரையாட உள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சிகளின் சில தரப்பினர் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவது தெரிகின்றது. உமா ஓயா, சாம்பூர் போன்ற மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் போதும் இவ்வாறான பொய்யான கருத்துகளை அவர்கள் குறிப்பிட்டனர்.”– என்றார்.

# சுற்றிவளைப்பிற்குச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல்

தலாவ – சுமுதுகம பிரதேசத்தில் சட்ட விரோத மதுபான சுற்றிவளைப்பிற்கு சென்ற தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கிடைத்த தகவலின் அடிப்படையில் தலாவ சுமுதுகம பகுதியிலுள்ள வீடொன்றுக்கு சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்பிற்காக பொலிஸ் அதிகாரிகள் சென்றிருந்தனர்.

இதன்போது, அந்த வீட்டிலிருந்த மதுபான விற்பனையாளர்கள் உள்ளிட்ட சிலர், பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகள் வழங்கிய தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் செய்தியில் உள்ள கீழ்த்தரம் - வக்கிர புத்தி - ஊடக மோசடி - அடாவடித்தனம் - பற்றி எல்லாம் நான் விலாவாரியாக இங்கு விவரிக்க போவதில்லை. ஊடக அறம் பற்றிய விவஸ்தையே இல்லாத ஓர் அடாவடிக் கும்பலை தனது எடுபிடிகளாக வைத்துக் கொண்டு, ஊடகக் காட்டுத் தர்பார் நடத்தும் அதன் 'முதலாளி அண்ட் கோ'வின் வழமையான நாசகார வேலையில் இதுவும் ஒன்று என்பது எல்லோருக்கும் தெரியும். உண்மைக்கு மாறாகப் பொய்களைப் புனைந்து, தம்முடன் முரண்பட்ட தனிப்பட்ட தரப்புகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் மூன்றாம் தர ஊடக வியலாளர் கூட்டம் அங்கு கொடிகட்டிப் பறப்பதும், அதன் படுகொச்சைத்தனப் போக்கின் மற்றொரு அடாவடி அங்கமே நேற்று அரங்கேறியது என்பதும் யாழ்ப்பாண வாசகர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே அந்தச் செய்தியில் நிறைந்து கிடக்கும் அபவாதத்தை - அழுக்கை - அலங்கோலத்தை - நான் விவரிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

'எள்ளெண்ணெய் பத்திரிகை' என்றும் அதன் முதலாளியை 'ஈழத்துக் காகம்' என்றும் வர்ணிக்கும் நிலையை ஆசிரியர் பீடம் வாங்கிக் கொடுத்ததன் விளைவை 'ஊடகப் போராளி' என்று தன்னை தப்பிதமாகக் கற்பிதம் பண்ணிக் கொள்ளும் அந்த ஊடக முதலாளி, கடந்த தேர்தலில் பட்டுணர்ந்தார். உணர்ந்தும் அவர் தெளியவில்லை.

'வீடெரிக்கும் அரசருக்கு நெருப்பு எடுத்து கொடுக்கும் மந்திரிகள் போல' ஜால்ரா போடும் அவரது ஆசிரிய பீடத் தற்குறிகள் நேற்றைய செய்தியின் மூலம் இனி வரும் தேர்தல்களில் தனக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்யும் பல நூற்றுக்கணக்கானோரை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அந்த தேர்தல்கள் வரும்போது அவர் உணர்வார் என்பது மிக நிச்சயம்.

கேட்டால் 'எனக்குத் தெரியாது; அது ஆசிரியர் பீடத்தின் வேலை' என்று அப்பட்டமாக நடிகர் திலகமாகி விடுவார். அப்படி ஆசிரியர் பீடம் செய்திகளுக்கும் விளைவுகளுக்கும் தனித்துப் பொறுப்பேற்ற ஒரு காலம் இருந்தது. அது, 2010 இல் மலை ஏறிவிட்டது என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

அந்த ஊடகத்தின் பெயரில் நீதிமன்றத்தில் ஆசிரியராகச் சத்திய பிரமாணம் செய்தவர் யார் என்ற பதிவை பார்த்தால் குட்டு வெளிப்பட்டு விடும்.

மதத்துடனும், மதத்தின் பெயரால் திருத்தொண்டு புரிவோரோடும் அடாவடித்தனம் பண்ணும் பிரகிருதிக்கு உரிய Letter of Demand இன்று போகும் என ஒரு தகவல் உண்டு.

தான் அடாவடியாக ஆக்கிரமித்து வைத்திருக்கும் வீட்டுக்கும் சேர்ந்து நீதிமன்றப் படி ஏறி அலையப் போகின்ற ஊடக முதலாளி, நேற்றைய செய்திக்கும் அத்தகைய அலச்சலை எதிர் கொள்வார் என்பது நிச்சயம்.

ஆளுநரின் அலுவலக ஊடக அறிக்கையைத் தந்திரமாக திரித்து, தனிப்பட்ட நபர்களுக்கு எதிரான வன்மமாக அந்த ஊடக முதலாளி அடாவடி அட்டகாசம் பண்ணியிருக்கின்றமை அப்பட்டமாக வெளிப்படும் விடயம்.

நீண்ட பாரம்பரியம் கொண்ட இந்துக்களின் கட்டமைப்புகளை கையாளுக்கும் விடயத்தில் வடக்கின் ஆளுநர் மிகக் கவனமாக இருந்திருக்க வேண்டும்.

'முறைப்பாடு வந்தது. நடவடிக்கை எடுத்தேன்!' - என்று வடக்கு எம்.பிக்களுக்குக் காதில் பூச்சுற்றுவது போல அவர்கள் சல்ஜாப்புக் கூறலாம். ஆனால் உண்மை, யதார்த்தம், பாரம்பரியம் தெரியாதவர் போல அவர் நடிக்க முடியாது.

அந்த ஊடகத்தின் எடுபிடிச் செய்தி எழுதுநர்களுக்கும் ஆளுநருக்கும் ஓர் ஒற்றுமை இருப்பது எனக்குப் புலப்படுகின்றது.

அந்தச் செய்தி எழுதுநர்கள் தங்கள் கும்பலின் தலைவருக்கு வாக்கு கிடைக்காமல், எதிர்ப் பிரச்சாரம் செய்வதற்கு நேற்றைய செய்தி மூலம் நூற்றுக் கணக்கான ஆள்களை சமூகத்தில் உருவாக்கிக் கொடுத்து வழி செய்திருக்கின்றார்கள்.

அதுபோல, இங்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருக்கும் ஆளுநர், மத சம்பந்தப்பட்ட விடயத்தில் - மாச்சரியத்துடன் - பொறுப்பின்றி - தமது குயுக்தித்தனத்தைக் காட்டி, அந்த ஜனாதிபதிக்கு வரும் தேர்தலில் இங்கு விழக்கூடிய கொஞ்சநஞ்ச வாக்குகளுக்கும் வேட்டு வைக்கும் வேலையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார் என்பதுதான் அந்த ஒற்றுமை.

இன்னொரு முக்கிய விடயத்தையும் ஆளுநருக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.

கல்வியில் மிக உயர்ந்த மாவட்டமாக யாழ்ப்பாணம் விளங்கியது. வெளியூர், வெளி மாவட்டம், வெளி மாகாணங்களில் இருந்து சிறார்கள் இங்கு படையெடுத்து வந்து தங்கி இருந்து, கல்வி கற்பது காலாதி கால வழமை. இது குருகுலக் கல்வி முறைக் காலத்திலிருந்து தொடரும் பாரம்பரிய. அது நம் பண்பாட்டின் ஓர் அங்கம். குறிப்பாக மலையக மக்களின் கல்விக்கு வடக்கு வளத்தைப் பங்கீடு செய்வது நமது பெருமை. சிறப்பு. அப்படி இங்கு வந்து கல்வி பெறுவது அவர்களின் உரிமை. நமது இரத்த உறவுகளின் சங்கமத்துக்கான துறை கல்வி. நம் அழியா - குறைவு படா - செல்வம் அது.

மலையகத்திலிருந்து கல்விக்காக இங்கு சிறுவர்கள் வருவார்களாயின் அதற்கான வாய்ப்பை ஒழுங்குபடுத்துவதுதான் - நேர்சீர்படுத்துவதுதான் - ஆளுநர் உட்பட்ட துறை சார்ந்தோரின் பொறுப்பு. வருகைக்குத் தடை போடுவது அல்ல. அப்படித் தடை போடுவது முட்டாள்களின் நிர்வாகம். யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்துக்கும் நமது கலாச்சார விழுமியங்களுக்கும் முற்றிலும் மாறான செயற்பாடு அது.

உண்மையில் வடக்கு மக்களுக்கு சேவையாற்றும் நேர்மையான மன எண்ணத்துடன் ஆளுநர் வடக்கே வந்திருப்பாராயின் அது அவருக்கு இலகுவாகப் புரியும். மத வேற்றுமைகளைப் பாராட்டும் மாற்ற முடியாத உள்நோக்கத்துடன் அக்கதிரையில் அவர் அமர்ந்திருப்பாராயின் அதன அவருக்கு எத்துணை தூரம் எடுத்துரைத்தாலும் புரியப்போவதில்லை என்பதும் நிச்சயம்.




# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்










## சம்பந்தன்...

முஸ்லிம் மக்களும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு இதுவரை காலமும் இலங்கையின் தமிழ் – முஸ்லிம் உறவுக்கு இணைப்புப் பாலமாக செயலாற்றிய சம்பந்தன் ஐயாவின் புகழுடலுக்கு தமது அஞ்சலிகளையும், மரியாதைகளையும் செலுத்தினர்.

மேற்படி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகத்திலிருந்து உலமாக்கள், பள்ளி வாசல் நிர்வாகிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண் கள் அமைப்பின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பஸில்...

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது சமகால அரசியல் நிலைவரம் குறித்து சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மொட்டுக் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள மஹஜன எக்சத் பெரமுன கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலேயே அந்தச் சந்திப்பில் பிரதமர் பங்கேற்றார். மஹஜன எக்சத் பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயக்கொடியும் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

மொட்டுக் கட்சியின் சார்பில் பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த சுமார் ஏழு பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையிலேயே, தமது கட்சியின் நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்காத பிரதமரின் கட்சியுடன் பஸில் ராஜபக்ஷ பேச்சு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பழைய விவாகாரம் இது!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வரும் 17ஆம் திகதிக்குப் பின்னர் - இன்னும் 12 நாள்களின் பின்பு - தேர்தல் திணைக்களம் விடுக்க வேண்டும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2019 நவம்பர் 17ஆம் திகதியன்று, அச்சமயத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற போது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் 2024 ஜூலை 17ஆம் திகதி இலங்கை தேர்தல் ஆணையத்துக்கு வந்து விடும் என்பது தெரிந்த விடயம்தான்.

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ், அடுத்த ஜனாதிபதி தேர்தலை எப்போது நடத்துவது என்ற சர்ச்சை இருக்கின்றமையினால் அது தொடர்பில் உயர்நீதிமன்றம் ஒரு முடிவு எடுக்கும் வரை தேர்தல் பற்றிய அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடுவதற்குத் தடை செய்யக் கோரும் அடிப்படை உரிமை மீறல் மனு, இவ்வளவு காலமும் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, அந்தத் தேர்தல் அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடுவதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பதாக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இப்படி இவ்வளவு காலமும் பார்த்திருந்துவிட்டு இப்போது கடைசி நேரத்தில் இவ்வாறு ஒரு மனுவை சமர்ப்பிப்பதின் உள்நோக்கம் இந்த தாமதத்திலும் கடைசி நேர எத்தனைத்திலும் புதைந்து கிடப்பது கண்கூடு.

இந்த மனுவை விசாரிப்பதற்கு வழமைக்கு மாறாக ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயத்தை பிரதம நீதியரசர் நியமித்திருக்கின்றமை பல்வேறு சர்ச்சைகள், சந்தேகங்களை ஏற்படுத்தி நிற்கின்றது என்பதை நேற்று மாலை இப்பத்தியிலேயே விரிவாக விவரித்து இருந்தோம்.

இந்த ஐந்து நீதியரசர் ஆயத்தை நியமித்த பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தன்னையும் அதில் ஒரு நீதியரசராகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் பற்றிய சர்ச்சை அவருக்குப் புதியதல்ல. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் அவர் நாட்டின் சட்டமா அதிபராக இருந்தார்.

அச்சமயமும் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான வழக்குகள், விசாரணைகளில் சட்டமா அதிபராக அவர் பங்கு பற்றியிருக்கின்றார்.

19ஆவது திருத்தத்தின் மூலம் தம் பதவிக் காலத்தில் வெட்டப்பட்டதாக கூறப்படும் ஒரு வருடத்தை தமது பதவி காலத்தில் தான் சேர்த்துக் கொள்ள முடியுமா என்று அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தார். அது ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறும் உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் சம்பந்தப்பட்டது. அந்த விடயத்தில் உயர் நீதிமன்றம் வழங்கும் பரிந்துரை வெறும் ஆலோசனை மட்டுமே. அது ஜனாதிபதியையோ பிறரையோ கட்டுப்படுத்தாது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த ஆலோசனை நியாயாதிக்க விடயம் தொடர்பில் விசாரணை செய்த ஐந்து நீதியரசர்களை கொண்ட அமர்வின் முன் அப்போதைய சட்டமா அதிபராக முன்னிலையான ஜயந்த ஜயசூரிய, ஆறு வருட ஆட்சிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆறு வருட ஆட்சிக்கால அதிகாரம் உண்டு என்றும், அதற்குப் பின்னர் தெரிவாகும் ஜனாதிபதிக்கே ஐந்து வருட ஆட்சிக்கால கட்டுப்பாடு என்றும் தமது வாதத்தை ஆலோசனை நியாயாதிக்கத்தின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையில் சட்டமா அதிபராக - தனது நிலைப்பாடாக - அவர் தெரிவித்து இருந்தார். ஆனால் அந்த ஆலோசனை நியாயாதிக்க அமர்வு அதனை ஏற்கவில்லை. 19 ஆவது திருத்தப்படி மைத்திரியின் பதவிக் காலமும் 5 வருடங்களே என அது ஆலோசனை வழங்கியது.

இப்போது மைத்திரிபால சிறிசேனவுக்குப் பின்னர் தெரிவான கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பின்னர் அவருக்குப் பதிலாகத் தெரிவான ரணில் விக்கிரமசிங்காவுக்கும் சேர்த்து மொத்தம் ஆறு வருட ஆட்சி காலம் உண்டு என வலியுறுத்தும் தரப்புக்களின் அடிப்படை உரிமை மீறல் வழக்கை அப்போதைய சட்டமா அதிபரான ஜயந்த ஜயசூரிய, இப்போது பிரதம நீதியரசராக இருந்து விசாரிக்க போகின்றார்.

இது விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாடு பெரும்பாலும் நாளை பிறக்கும் புதிய வாரத்தில் தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

# இணையத்தள பண மோசடி நபர்கள் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

இணையத்தளம் ஊடாக சட்ட விரோதமாக பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 37 பேரும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே முன்னிலையில் சந்தேகநபர்கள் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இலங்கையிலிருந்து இணையத்தளம் ஊடாக வியாபார ரீதியில் மோசடியில் ஈடுபட்ட 22 வயதான இலங்கை பிரஜையும் சீன, பங்களாதேஷ் மற்றும் நேபாள பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு பணத்தை இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அந்தப் பணத்தை இலங்கை ரூபாவில் நீதிமன்ற பொறுப்பில் வைக்குமாறும் அறிவித்துள்ளார்.













## தமிழரசின்...

இந்தத் தகவலை அண்ணாமலையே தங்களிடம் தொலைபேசி மூலம் உறுதி செய்துள்ளார் என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

அதேவேளை, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்கும் வாய்ப்புகள் உள்ளபோதும், அது தொடர்பில் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்று மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் நேற்று யாழ்ப்பாணத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அன்னாரின் புகழுடல் நேற்றுக் காலை கொழும்பில் இருந்து விசேட விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. அதன் பின்னர் யாழ். மார்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் முற்பகல் 10.15 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதன்போது சம்பந்தனின் புகழுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு கௌரவம் செலுத்தப்பட்டதோடு தலைமைக் காரியாலத்தில் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

அதன் பின்னர் அன்னாரின் புகழுடல் யாழ். நகர் பகுதியூடாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

சம்பந்தனின் புகழுடல் இன்று காலை யாழ். பலாலி விமான நிலையத்தில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.



# சம்பந்தனின் புகழுடலுக்கு வடக்கு ஆளுநர் அஞ்சலி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் புகழுடலுக்கு நேற்று ஆளுநர் அஞ்சலி செலுத்தியதுடன், சம்பந்தனின் உருவப்படத்துக்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

சம்பந்தனின் உறவினருடன் ஆளுநர் தனது அனுதாபங்களையும் பகிர்ந்துகொண்டார்.





# பொன்சேகா எந்நேரமும் வெளியேறலாம்!

## சஜித்தின் கட்சி அதிரடி அறிவிப்பு

“ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சரத் பொன்சேகா எம்.பி. எந்நேரமும் வெளியேறலாம். அவருக்கான கதவு திறந்தே உள்ளது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“அரச தரப்பின் ஒப்பந்தத்தையே சரத் பொன்சேகா நிறைவேற்றி வருகின்றார். அவரின் நூல் வெளியீட்டு நிகழ்வைக்கூட ஜனாதிபதி செயலகமே நடத்தி இருந்தது. எனவே, அவர் தற்போது எந்தப் பக்கம் நிற்கின்றார் என்பது தெளிவாகின்றது.

அவர் எமது அணியில் இருந்து வெளியேறலாம். அதனால் பாதிப்பில்லை. ஆனால், இப்படி கட்சியை, தலைமையைத் தாக்கிவிட்டு விடை பெற முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை



அல்ல.

அதேவேளை, ஆளுங்கட்சியில் உள்ள சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர். டலஸ் அழகப்பெருமவுடனும் பேச்சு நடத்தப்படுகின்றது.

எனக்குப் பிரதமர் பதவி ஆசை இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெற வைப்பதே எமது நோக்கம்.” – என்றார்.






# பாலஸ்தீன மக்களுடன் இலங்கை வருட இறுதிக்குள் ஒன்றாக நிற்பர்

## நம்பிக்கை வெளியிடுகின்றார் சஜித் பிரேமதாஸ

இரட்டை நிலைப்பாடு இல்லாமல் இலங்கை இந்த வருட இறுதிக்குள், பாலஸ்தீன மக்களுடன் ஒன்றாக நிற்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 284 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மட்டக்களப்பு, பகுதி பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரச பயங்கரவாதத்தை முன்னெடுத்து பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பாலஸ்தீன மக்கள் மீதான மனிதாபிமானமற்ற தாக்குதல்களையும் கொலைகளையும் உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேல் பிரதமரைக் கேட்டுக்கொள்கிறோம்.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம், ஒரு நாடு உருவாகும் போது நிலம், மக்கள் மற்றும் அரசாங்கம் என்பன இருக்க வேண்டிய முக்கிய கூறுகளாகும்.”– என்றார்.






















# காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் விசேட நடமாடும் சேவை மட்டு நகரில்

**(பழுவூரான்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உதித்த காணியற்ற மக்களுக்கு காணி வழங்கும் “உறுமய” தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியில் குடியிருக்கும் மக்களுக்கு உறுதி வழங்குவதற்கான முன்னாயத்த நடமாடும் சேவை நேற்று வியாழக்கிழமை வர்த்தக, சுற்றாடல் அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் பணிப்புரைக்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் என்.விமல்ராஜ் தலைமையில்

தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கான சட்டபூர்வமான உரித்து காணியற்ற மக்களுக்கு மிக விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்

மட்டக்களப்பு மக்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பாக உள்ளது. ஒரு சிறிய தொகைப் பணத்தை செலுத்தி நிலம் ஒன்றினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இதன் போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கருத்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பத்மஶ்ரீ லியனகே, மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிஹால், காணி சீர்திருத்த ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.










# மட்டு. ஆரையம்பதி பிரதான வீதியில் விபத்தில் ஓட்டோ சாரதி படுகாயம்!

(பழுவூரான்)

காத்தான்குடியிலிருந்து ஆரையம்பதி நோக்கி நேற்று வியாழக்கிழமை ஓட்டோவைச் செலுத்திச் சென்ற சாரதிக்குத் திடீரென்று ஏற்பட்ட நெஞ்சுவலியால் ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது விபத்தில் காயமடைந்தவர் காத்தான்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபராவார். அவர் ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையில் அனுமதி சேர்க்கப்பட்டு அதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# போலி முகநூல் கணக்கு மூலம் ஆசிரியரை அவதூறு செய்து தொலைபேசியில் மிரட்டிய கிராம அலுவலருக்குப் பிணை!

## வவுனியா நீதிமன்றம் நேற்று நடவடிக்கை

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஆசிரியர் ஒருவருக்கு போலி முகநூல் கணக்கு மூலம் அவதூறை ஏற்படுத்தி தொலைபேசியில் மிரட்டல் விடுத்த கிராம அலுவலர் ஒருவர் கைதாகி நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தைச் சேர்ந்த தரணிக்குளம் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கிராம அலுவலரின் ஆதரவுடன் இடம்பெற்ற காடழிப்புத் தொடர்பில் கிராம அபிவிருத்தி சங்கம் ஊடாக வெளிப்படுத்தியமையால் அந்த்ச் ஆசிரியருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் போலி முகநூலில் அந்த்ச் ஆசிரியர் தொடர்பாக தவறான தகவல்கள் பகிரப்பட்டதுடன், தொலைபேசியிலும் ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட குறித்த ஆசிரியர் ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, ஒம்புட்ஸ்மன், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் என பலரிடமும் முறையிட்டமையுடன், குறித்த சம்பவம் தொடர்பில கணனி பயன்பாட்டு கட்டுப்பாட்டு பிரிவு பொலிஸாருக்கும் முறைபாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார் அந்த முகநூல் கிராம அலுவலருடையது என்பதைக் கண்டறிந்தமையுடன் அதனை முடக்கியிருந்தனர். இந் நிலையில் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் தொலைபேசியில் அச்சுறுத்தியமை மற்றும் போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்தியமை தொடர்பில் கிராம அலுவலருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணை இடம்பெற்ற போது மன்றின் கட்டளைக்கு அமைய நீதிமன்ற சிறையில் அடைக்கப்பட்ட கிராம அலுவலர் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.




# ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட வேலையில்லாப் பட்டதாரிகளை மட்டக்களப்பில் நேரில் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வேலையில்லாப் பட்டாதாரிகளின் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் கதைத்து அதற்கான தீர்வைப் பெற்றுதருவார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவின் முன்னால் நேற்று முன்தினம் புதன்கிழமை 2 ஆவது நாளாக வேலை கோரி ஆர்பாட்டத்தில் வேலையில்லாப் பட்டதாரிகள் ஈடுபட்டனர். இந்த ஆர்பாட்ட இடத்திற்கு மாலை 6 மணிக்குச் சென்ற எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளைச் சந்தித்து அவர்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து கொண்டார்

இதன் போது வேலையில்லாப் பட்டதாரிகள் மேல் மாகாணம் மற்றும் யாழ்ப்பாணத்தில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், கிழக்கு மாணகாணத்தில் நியமனங்கள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், பல கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வியைக் கற்று பட்டங்களை பெற்றபோதும் இதுவரை அரசாங்கம் வேலை வாய்ப்பை வழங்கவில்லை எனவும், இதனால் வாழ்வாதரமின்மை மற்றும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும், படித்துப் பட்டம் பெற்ற எங்களுக்கு வேலை வாய்பை வழங்கவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தனர். இதற்கு வெர்

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கதைப்பார் எனவும், முடிந்தளவு தீர்வைப் பெற்றுதர முயற்சிப்பார் எனவும் தெரிவித்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அதையடுத்து ஆர்பாட்காரார்களும் அங்கிருந்து விலகிச் சென்றனர்.










# சுங்க பணியாளர் முன்னெடுத்த போராட்டம் கைவிடப்பட்டது

இலங்கை சுங்க பணியாளர்கள் நேற்று பணிப்புறக் கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சுங்கம், மதுவரி மற்றும் இறைவரி ஆகிய மூன்று திணைக்களங்களை ஒன்றிணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜனாதிபதியுடனும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர், போராட்டம் கைவிடப்பட்டதாக சுங்க தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், இதன்போது நிறைவேற்ற முடியாமல் போன கடமைகளை இந்த வார இறுதிக்குள் நிறைவேற்றுவதற்கு சுங்க தொழிற்சங்கங்கள் இணங்கியுள்ளன.

# கொழும்பில் 18 மணித்தியால தண்ணீர் விநியோகத் தடை!

கொழும்பின் பல பகுதிகளில் 18 மணித்தியால தண்ணீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பதலையிலிருந்து செல்லும் தண்ணீர் விநியோக குழாயில் ஏற்பட்ட நீர்க்கசிவை சரிசெய்வதற்காகவே இவ்வாறு தண்ணீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.



கொலன்னாவ, கடுவெல, கொட்டிகாவத்தை – முல்லேரியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நீர் விநியோகத் தடை ஏற்படும்.

நீர் விநியோகத் தடை நேற்று இரவு 9.00 மணி முதல் இன்று பிற்பகல் 3.00 மணி வரை அமுலில் இருக்கும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.








## 1700 ரூபா சம்பள அதிகரிப்பு:

# வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்து தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செயற்படுத்துவதை தடுத்து உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட மாட்டாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தி பெருந்தோட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனம் உள்ளிட்ட 21 நிறுவனங்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொருள்களின் விலை குறைப்பு

உடன் அமுலாகும் வகையில், சில வகையான அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதன்படி சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மொத்தக் கொள்வனவின் போது கிலோ ஒன்றுக்கு 15 ரூபா குறைக்கப்பட்டு, 215 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு பருப்பு மொத்தக் கொள்வனவின் போது, கிலோ ஒன்று 14 ரூபாவால் குறைக்கப்பட்டு 282 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வெள்ளை சீனியின் விலை மொத்தக் கொள்வனவின் போது கிலோ ஒன்று 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 269 ரூபாவாக நிலவுகிறது.

# முதலில் மக்களின் பிரச்சினைகள் பிறகுதான் சினிமாவில் நடிப்பது

## பவன் கல்யாண் அறிவிப்பு

“யாராவது என்னிடம் மக்கள் பிரச்சினையை கவனிக்காமல் ‘ஒ.ஜி’ படப்பிடிப்பில் கவனம் செலுத்தி வருகிறீர்களே என கேள்வி எழுப்பினால் நான் என்ன செய்வேன். படத் தயாரிப்பாளர்களிடம் இதற்காக நான் மன்னிப்புக் கேட்டுவிட்டேன்”

- இவ்வாறு ஆந்திரா துணை முதல் வரும், நடிகருமான பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

ஆந்திரா துணை முதல்வர் பவன் கல்யாண், அவரது சொந்த தொகுதியான பிதாபுரம் பகுதியில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். அப்போது அவர் மேடைக்கு வரும்போது, ரசிகர்கள் பலரும் அவர் நடிக்கும் ‘ஒ.ஜி’ படத்தை குறிப்பிட்டு கோஷங்கள் எழுப்பினர். அப்போது சிரித்துக்கொண்டே பவன் கல்யாண், “படங்களில் நடிக்கும் அளவுக்கு



எனக்கு நேரம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?” என ரசிகர்களை நோக்கி கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து நிகழ்வில் உரையாற்றுகையில்,

“இந்த தொகுதியை சிறப்பாக மாற்றுவேன் என நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். முதலில் அதில் கவனம் செலுத்த விரும்புகிறேன். குறைந்தப் பட்சம் புதிய சாலைகள் அமைக்கப்படாமல் இருப்பதற்கோ, குண்டும் குழியுமாக சாலைகள் இருப்பதற்கோ யாரும் என்னை குறை சொல்லாமல் இருக்க வேண்டும். அதற்கான நான் அதில் கவனம் செலுத்த வேண்டும். யாராவது என்னிடம் மக்கள் பிரச்சினையை கவனிக்காமல் ‘ஒஜி’படப்பிடிப்பில் கவனம் செலுத்தி வருகிறீர்களே? என கேள்வி எழுப்பினால் நான் என்ன செய்வேன்?


நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். முதலில் நான் மக்களுக்கு சேவை செய்வதில் கவனம் செலுத்துகிறேன். பின் நேரம் கிடைக்கும்போது படப்பிடிப்பில் கலந்துகொள்கிறேன் என பட தயாரிப்பாளர்களிடம் நான் பணிவுடன் கூறிவிட்டேன். நீங்கள் நிச்சயம் ‘ஒ.ஜி’ படத்தைப் பார்ப்பீர்கள். அது உங்களுக்கு பிடிக்கும்” - என்றார்.

# வேகமாக பரவும் ஜிகா வைரஸ்

ஏடிஸ் வகை கொசு மூலம் பரவும் ஜிகா வைரஸ் காய்ச்சல் பரவலால், எச்சரிக்கையாக இருக்குமாறு மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதியுள்ளது.

மகாராஷ்டிராவில் ஜிகா வைரல் பரவல் கண்டறியப்பட்டதையடுத்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு சுகாதார அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக கர்ப்பிணி பெண்களுக்கு ஜிகா வைரஸ் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் கர்ப்பிணி பெண்களுக்கு



ஜிகா வைரல் உள்ளதா என்று சோதிக்க வேண்டும் என்றும் ஜிகா வைரல் இருந்தால் கருவின் வளர்ச்சியை கண்காணிக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஏனெனில் கர்ப்பிணி பெண்களுக்கு ஜிகா வைரஸ் தொற்று ஏற்பட்டால் குறைப்பிரசவத்தில் குழந்தை பிறப்பதற்கும், குறைபாடுகளுடன் குழந்தை பிறப்பதற்கும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கருச்சிதைவு ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

தலைவலி, தோல் வெடிப்பு, காய்ச்சல், மூட்டு வலி உள்ளிட்டவை ஜிகா வைரஸ் தொற்றுப் பாதிப்பின் அறிகுறிகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜிகா வைரஸ் பாதிப்பு தீவிரமாக கண்காணிக்கப்படுவதாக மாநில அரசு தகவல் தெரிவித்துள்ளது.



# காற்று மாசுபாட்டால் இந்தியாவில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

காற்று மாசுபாட்டால் இந்தியாவில் ஆண்டுக்கு 33,000 பேர் உயிரிழப்பதாக தெரியவந்துள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் 10 நகரங்களில் காற்று மாசுபாடு காரணமாக இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அதன்படி அகமதாபாத், பெங்களூர், சென்னை, டெல்லி, ஹைதராபாத், கொல்கத்தா, மும்பை, புனே, சிம்லா மற்றும் வாரணாசி ஆகிய நகரங்களில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

மேலும் இந்தியாவில் காற்றின் தரம் உலக சுகாதார அமைப்பின் தரத்தை விட அதிகமாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனநாயக கட்சியின் வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுவது உறுதி

## ஜோ பைடன் தெரிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சியின் வேட்பாளராக தான் போட்டியிடுவது உறுதி என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதனை ஜோ பைடன் தரப்பு பிரச்சாரக் குழு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளது.

அந்த மின்னஞ்சலில் மேலும் குறிப்பிடுகையில் ,

“ஜனநாயக கட்சியின் வேட்பாளர் நான் தான். நான் போட்டியில் நீடிக்கின்றேன். யாரும் என்னை விலகும்படி சொல்லவில்லை. நானும் இதிலிருந்து வெளியேறவில்லை. இறுதிவரை போட்டியில் இருப்பேன். இந்த தேர்தலில் நாம் தான் வெற்றி பெறப் போகிறோம். நவம்பரில் ட்ரம்பை வீழ்த்த எனக்கும், கமலா ஹாரிஸுக்கும் உதவுங்கள்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்க தொலைக் காட்சியொன்றினால் ஒளிபரப்பப்பட்ட, தேர்தலுக்கான முதல் விவாத மேடையில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும், தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும் பங்கேற்றிருந்தனர்.

இதில் டொனால்ட் ட்ரம்ப் அதிரடி தொனியில் பேசியபோது ஜோ பைடன் சற்று அமைதி காத்தமை தற்போது பேசுபொருளாகியுள்ளது.

இந்த விவாதத்தின் போது ட்ரம்புக்கு பைடன் பதிலடி கொடுக்க முயற்சித்தபோதும், அவர் தடுமாறியமை, நேரலை நிகழ்ச்சியை பார்த்து கொண்டிருந்தவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அதிர்ச்சியாக அமைந்தது.

இதனையடுத்து, வேட்பாளர் ஜோ பைடன் மாற்றப்படலாம் என்ற கருத்து நிலவி வந்த நிலையில், தற்போது ஜோ பைடன் தரப்பில் இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் நிலநடுக்கம்!

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று மதியம் திடீர் நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் அந்நாட்டு நேரப் படி நேற்று மதியம் 12.12 மணியளவில், ரிச்டர் அளவுகோலில் 5.4 ஆக பதி வாகியுள்ளது.

50 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் கிழக்கு சிபா மாகாணத்திற்கு அப்பால், 35.2 டிகிரி வடக்கு அட்சரேகை மற்றும் 140.5 டிகிரி கிழக்கே தீர்க்கரேகையில் உணரப்பட்டுள்ளது.

டோக்கியோவின் 23 தொகுதிகளிலும் இந்த நடுக்கம் உணரப்பட்டுள்ளதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், நிலநடுத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

அத்துடன், சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை எனவும் ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# சீன வெளியுறவுத்துறை அமைச்சருடன் இந்திய வெளியுறவு அமைச்சர் சந்திப்பு

சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யியும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் நேற்று கஜகஸ்தானில் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 24 ஆவது உச்சி மாநாடு, நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் பங்கேற்க, இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சென்றுள்ளார்.

இந்த நிலையில், சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யி-யை, அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியா - சீனா இடையே எல்லை பிரச்னை நீடித்து வரும் நிலையில், குறித்த இரு நாட்டு அமைச்சர்களும் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.



இதன்போது, இருவரும் எல்லை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்து சிறிது நேரம் கலந்துரையாடியதுடன், புகைப்படமும் எடுத்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.07.2024




எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்துச் செயல்பட வேண்டும் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செலவுகளை கட்டுபடுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று சிறப்பாக நாளாக அமையும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகுமுறை மூலம் எளிதாக இலக்கை அடையலாம்.

உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விஷயத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவ ரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

கணிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப்பதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நீங்கள் சிறந்த முறையில் ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப் பான நாள். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப் படுவீர்கள்.




வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி, முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நீங்கள் அறிவுபூர்வமாக செயலாற்று வதன் மூலம் இன்று எழும் பிரச்சினை களைக் கையாள இயலும்.இ ன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன் றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லைகள் காணப்படும்.




உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்




நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரியமின் மையால் பிரச்சினைகள் உருவாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவனமுடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோபமாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த்தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக்கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமைகளைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்சிவசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கியமாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.07.2024

## தனுசு

இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமையான ஆச்சரியங்கள் காத்திருக்கும். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனைவரிடத்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணிகளை சுமூகமாகக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். திருப்திகரமான நிலை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.

## கும்பம்

இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக்கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத்தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மீனம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் தேவைகளுக்கு கடன் கூட வாங்குவீர்கள்.

சளி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு காணப்படும். பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்தது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA
Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Experience
S.Thumilan Group Chairman
CENTRAL PARK 15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Karathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park